### தேசிய நெடுஞ்சாலையில்

## திடீரென தீப்பிடித்து எரிந்த டேங்கர் லாரியால் பரபரப்பு

**உளுந்தூர்பேட்டை, ஏப். 2:** உளுந்தூர்பேட்டை அருகே செங்குறிச்சி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருச்சியில் இருந்து காஞ்சிபுரம் நோக்கி சென்ற டேங்கர் லாரியில் திடீரென இன்ஜின் பகுதியில் லேசான தீப்பிடித்து புகை வந்ததுள்ளது. இதனை பார்த்த டிரைவர் உடனடியாக லாரியை நிறுத்திவிட்டு உளுந்தூர் பேட்டை தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். விரைந்து சென்ற தீயணைப்பு குழுவினர் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்தனர். இச்சம்பவத்தால் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலை சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

### சங்கராபுரம் பகுதியில்

## சொட்டுநீர் பாசன முறையில் மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்



**சங்கராபுரம், ஏப். 2:** கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் பகுதி முழுக்க முழுக்க விவசாய விளைநிலங்களைக் கொண்ட பகுதியாகும். இந்த பகுதியில் முக்கிய பயிராக நெல், கரும்பு, மக்காச்சோளம், மரவள்ளி, மணிலா போன்ற பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதில் முக்கிய பணப்பயிராக மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து வேளாண் ஆலோசகர் சதீஷ் மன்னன் கூறுகையில், மரவள்ளி என்பது 10 மாத கால பயிர் ஆகும். குறைந்த தண்ணீர் செலவிலும், குறைந்த பராமரிப்பு செலவிலும், அதிக லாபம் தரக்கூடிய பயிர் மரவள்ளி. குறிப்பாக களை யெடுக்கும் பணி மிக மிகக் குறைவு. தண்ணீர் வாரத்திற்கு ஒருமுறை பாய்ச்சினால் போதுமானது. அதிக அளவில் உரம் தேவை இல்லை, பூச்சி நோய்கள் தாக்கம் அதிகம் இருக்காது. இதுபோன்று குறைந்த பராமரிப்பு செலவில் அதிக லாபம் தரக்கூடிய பயிராக மரவள்ளி இருப்பதாலும், அரசு சொட்டுநீர் பாசனத்திற்கு மானியத்துடன் கூடிய சொட்டுநீர் பாசன வசதி வழங்குவதால் சங்கராபுரம் பகுதியில் உள்ள சங்கராபுரம், புதுப்பாலப்பட்டு, வடபாலப்பட்டு, பாசேரி, தும்பை உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மரவள்ளி சொட்டுநீர் பாசன முறையில் பயிரிட்டு விவசாயிகள் அதிகளவில் பயன்பெற்று வருகின்றனர் என்று தெரிவித்தார்.

## இரவு 11 மணிக்கு மேல் கடையை திறக்க அனுமதிக்க வேண்டும்

### வணிகர் சங்கங்கள் கோரிக்கை



விழுப்புரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை சார்பில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் நகர செயலாளர் ரமேஷ் பேசினார். அருகில் நகர தலைவர் வீரகுமார்.

**விழுப்புரம், ஏப். 2:** விழுப்புரம் மாவட்டத்தில் இரவு 11 மணிக்கு கடையை திறந்து வணிகம் செய்ய அனுமதிக்க வேண்டுமென வணிகர் சங்கங்களின் பேரவை அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளது.

விழுப்புரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஆலோசனை கூட்டம் நகர தலைவர் வீரகுமார் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ரமேஷ் முன்னிலை வகித்தார். பொருளாளர் ராம்சிங் வரவேற்றார். துணைத்தலைவர் ஜெகன், துணை செயலாளர் அருண்குமார், மகளிர் அணி கிருபா, கவுரவ தலைவர் விஜயகுமார், சட்ட ஆலோசகர் மதன், செயற்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சிறு, குறு தொழில்கள் பாதிக்கின்ற லூலூ மார்க்கெட்டை நுழைய விட மாட்டோம். விலைவாசி உயர்வை கட்டுபடுத்த வேண்டும். ஜிஎஸ்டி வரி, கடை வாடகை உயர்வு, மின் கட்டணம் உயர்வு, சொத்து வரி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விழுப்புரம் செல்போன் கடைமீது வெடிகுண்டு வீசியவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இரவு 11 மணிக்கு மேல் கடையை திறந்து வணிகம் செய்யும் நடைமுறையை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## உளுந்தூர்பேட்டையில் அரிய வகை ஆந்தை

### தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்



அரிய வகை ஆந்தை.

**உளுந்தூர்பேட்டை, ஏப். 2:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சி பஜனைமட தெருவில் வசித்து வருபவர் மணி. இவருடைய வீட்டின் அருகில் உள்ள வாய்க்காலில் அரியவகை ஆந்தை காலில் அடிபட்டு உயிருக்கு போராடிய நிலையில் கிடந்தது.

இது குறித்து அவர் உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். விரைந்து சென்ற தீயணைப்பு நிலைய அலுவலர் பொறுப்பு ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழுவினர் அந்த ஆந்தையை உயிரோடு மீட்டு உரிய முதலுதவி சிகிச்சை அளித்து அருகிலுள்ள காப்பு காட்டில் விட்டனர். இந்த அரியவகை ஆந்தையை பார்க்க அந்த தெருவில் உள்ள பொதுமக்கள் திரண்டதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

### வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

## ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் பழங்குடியின மக்கள் வீடு கட்டுவதற்கான பணி ஆணை

### மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்



வல்லம் ஒன்றியத்தில் பழங்குடியின மக்கள் வீடு கட்ட பணி ஆணையை மஸ்தான் எம்எம்ஏ வழங்கினார். அருகில் மயிலம் எம்எல்ஏ சிவக்குமார்.

**செஞ்சி, ஏப். 2:** விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பிரதான் மந்திரி ஜன்மன் திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்கள் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்காக உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய குழு தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் உதயகுமார் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு வல்லம் ஊராட்சியை சேர்ந்த போந்தை, கீழ் வைலாமூர், ஓட்ட மண்டபம், கண்டமநல்லூர், சூரப்பன்தாங்கல் ஆகிய கிராமங்களை சேர்ந்த பழங்குடியின மக்கள் 27 பேருக்கு 1 கோடியே 37 லட்சத்து 49 ஆயிரத்து 750 ரூபாய் மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான ஆணைய வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மணிகண்டன், சுந்தரபாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் நன்றி கூறினார்.

## மாநில நெடுஞ்சாலை ஆணையம் அமைப்பதற்கு ஊழியர்கள் எதிர்ப்பு

### போராட்டம் நடத்திய 50 பேர் கைது




தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் சார்பில் மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை கலைத்திட கோரி விழுப்புரம் எல்லீஸ்சத்திரம் சாலையில் உள்ள கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

**விழுப்புரம், ஏப். 2:** சாலை பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி பணி காலமாக முறைப்படுத்தி ஆணை வழங்கிட வேண்டும். மாநில நெடுஞ்சாலை ஆணையத்தை கலைத்திடவும், அரசாணை 140ஐ ரத்து செய்திடவும் வேண்டும். மாநில நெடுஞ்சாலைகளில் 210 சுங்கச்சாவடி அமைத்து கார்ப்பரேட் கம்பெனி சுங்கவரி வசூல் செய்வதை கண்டித்தும், நெடுஞ்சாலைத்துறையில் 5 ஆயிரம் பணியிடங்களை ஒழிக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். கிராமப்புற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்கள் சங்கம் சார்பில் விழுப்புரம் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர்கள் ராஜ்குமார், பைரவன், ஜெயராமன், ஜோசப், ராஜா ஆகியோர் தலைமை தாங்கினர். மாநில துணைத்தலைவர் முத்து துவக்க உரையாற்றினார். ரவி சிறப்புரையாற்றினார். நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது மாநில நெடுஞ்சாலை ஆணையம் அமைத்து வெளியிட்ட அரசாணையை தீவைக்க முயன்று போராட்டத்தில் ஈடுபட்ட 50 பேரை போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

### அரசு ஊழியர் தற்கொலை

**கள்ளக்குறிச்சி, ஏப். 2:** கள்ளக்குறிச்சி அருகே தண்டலை கிராமத்தை சேர்ந்தவர் பெரியசாமி மகன் கதிர்நிறைசெல்வன் (49). இவர் தியாகதுருகத்தில் உள்ள கல்வித்துறை அலுவலகத்தில் (டிஇஓ) ரெக்கார்டு கிளார்க் அலுவலராக பணியாற்றி வந்துள்ளார். இவர் கடந்த சில தினங்களாகவே மன வேதனையில் இருந்து வந்ததாகவும், இந்நிலையில் நேற்று பணிக்கு செல்லாமல் வீட்டில் இருந்தவர் தனது வீட்டின் அருகில் தூக்குப்போட்ட நிலையில் இறந்து கிடந்துள்ளார். இதுபற்றி தகவலறிந்ததும் கள்ளக்குறிச்சி உதவி ஆய்வாளர் பரிமளா மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று கதிர்நிறைசெல்வன் உடலை மீட்டு கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இதுகுறித்த புகாரின் பேரில் கள்ளக்குறிச்சி போலீஸ் உதவி ஆய்வாளர் பரிமளா மற்றும் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## வள்ளலார் சத்திய தர்மசாலையில் கூட்டு வழிபாடு

**சங்கராபுரம், ஏப். 2:** சங்கராபுரம் முதல் பாலமேட்டில் அமைந்துள்ள வள்ளலார் சத்திய தர்மசாலையில் உலக நன்மைக்காக கூட்டு வழிபாடு நடைபெற்றது. முன்னதாக வள்ளல் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அணையா விளக்கிற்கு நெய் தீபம் ஏந்தி வழிபாடு செய்தனர். இந்த வழிபாட்டில் சங்கராபுரம், வட சேமபாளையம், வட செட்டியந்தல், மஞ்சபுத்தூர், மேலேறி, சோழம்பட்டு, நெடுமானூர், சங்கராபுரம், வட சிறுவள்ளூர், செம்பரம்பட்டு, பூட்டை, அரசம்பட்டு, பாலப்பட்டு, பள்ளிப்பட்டு, தும்பை, பாசேரி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து திரளான பக்தர்கள் வள்ளலார் சத்திய தர்மசாலை கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

## ஓட்டல் மேலாளருக்கு கொலை மிரட்டல்

### 3 பேர் மீது வழக்கு

**தியாகதுருகம், ஏப். 2:** கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் புறவழிச் சாலையில் தனியார் உணவகம் செயல்பட்டு வருகிறது. இதில் கள்ளக்குறிச்சி ஏமப்பேர் பகுதியைச் சேர்ந்த ராமசாமி மகன் மணிகண்டன் என்பவர் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் கடந்த மார்ச் 30ம் தேதி அன்று உணவகத்திற்கு மது போதையில் வந்த 3 பேர் தங்குவதற்கு ஓட்டலில் அறை கேட்டு தகராறு செய்ததாக கூறப்படுகிறது. தகவல் அறிந்து வந்த ஓட்டல் மேலாளர் மணிகண்டன் சம்பந்தப்பட்டவர்களிடம் நீங்கள் மது போதையில் இருப்பதால் உங்களுக்கு தங்கும் அறை அளிக்கமுடியாது என்று தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்த 3 பேரும் மணிகண்டனை தகாத வார்த்தையால் திட்டியும் பெட்ரோல் ஊற்றி எரித்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தனர். இதுகுறித்து மணிகண்டன் தியாகதுருகம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சம்பவ இடத்திற்கு வந்த தியாகதுருகம் போலீசார் தகராறில் ஈடுபட்ட காட்டனந்தல் கிராமத்தைச் சேர்ந்த வெங்கடேசன், ராஜ்குமார், கள்ளக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் ஆகிய 3 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தினகரன்
வரி விளம்பர பகுதியில் பிறந்தநாள், திருமணநாள் விளம்பரத்திற்கு
மிகக்குறைந்த சலுகை கட்டணம்

## ஒதியத்தூர் ஆறுபடையப்ப சுவாமி கோயில் தேர் திருவிழா

### திரளான பக்தர்கள் பங்கேற்பு



ஒதியத்தூர் கிராமத்தில் நடந்த பங்குனி மாத கிருத்திகை திருவிழாவில் பக்தர்கள் அலகு, வேல் குத்தியும், காவடி எடுத்தும் தேரை இழுத்து சென்றனர்.

**கண்டாச்சிபுரம், ஏப். 2:** கண்டாச்சிபுரம் அடுத்த ஒதியத்தூர் கிராமத்தில் மலை மீது ஆறுபடையப்ப சுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் வருடந்தோறும் பங்குனி மாத கிருத்திகையில் வேல் குத்தி பக்தர்கள் தேரை இழுத்து வீதியுலா வரும் நிகழ்வு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் கடந்த வெள்ளிக்கிழமை காலை சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், யாகம் நடைபெற்று கொடி ஏற்றத்துடன் விழா தொடங்கியது. தொடர்ந்து முக்கிய நாளான நேற்று காலை சக்திவேல் வீதியுலா, குளக்கரையில் காவடி பூஜை, அலகு போடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நேற்று பிற்பகல் தீ மிதித்தல் நிகழ்வும், திருத்தேர் வீதியுலாவும் விமரிசையாக நடைபெற்றது. நேற்று இரவு முருகன், வள்ளி மற்றும் தெய்வானை சுவாமிக்கு திருகல்யாணம் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதில் விழா குழுவினரும், கிராம பொதுமக்களும் அன்னதானம் வழங்கி விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## உளுந்தூர்பேட்டையில் அரசு கலை கல்லூரி அமைக்க வேண்டும்

### கல்வியாளர்கள் கூட்டமைப்பு கோரிக்கை



**உளுந்தூர்பேட்டை, ஏப். 2:** உளுந்தூர்பேட்டை பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக கோரிக்கையாக இருந்து வருகிறது. இந்த நிலையில் வருகின்ற சட்டமன்ற கூட்ட தொடரில் உயர்கல்வி துறை மானிய கோரிக்கையின் போது உளுந்தூர் பேட்டைக்கு அரசு கலைக் கல்லூரி அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்று உளுந்தூர்பேட்டை பகுதி சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்வியாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ராவணன், அன்பழகன், கோதண்டபாணி, காமராஜ் மற்றும் அறிவுக்கரசு, சத்யா, தெய்வீகன், ஆறுமுகம், பழனி உள்ளிட்ட நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் மற்றும் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க கோரி வருகின்ற ஏப்ரல் 19ஆம் தேதி சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், கல்லூரி மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து பேரணி நடத்துவது என்றும், பேருந்து நிலையப் பகுதியில் கையெழுத்து இயக்கம், அனைத்து கிராம ஊராட்சிகளிலும் தீர்மானங்கள் இயற்ற வேண்டும், நோட்டீஸ் உள்ளிட்ட விழிப்புணர் பிரசாரம் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் உளுந்தூர் பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த ஏராளமான நிர்வாகிகள் பட்டதாரி இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

## ரோசனை துவக்க பள்ளி ஆண்டு விழா




**திண்டிவனம், ஏப். 2:** திண்டிவனம் நகராட்சி ரோசனை தொடக்கப்பள்ளியில் பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது. மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் அருள் தலைமை தாங்கினார். வட்டாரக்கல்வி அலுவலர்கள் ரவிச்சந்திரன், கிருஷ்ணன், வட்டார வளமேற்வையாளர் அருணா, ஆசிரிய பயிற்றுநர் முனைவர் ஸ்ரீமுல்லை, நகர மன்ற உறுப்பினர் தில்ஷாத்பேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமையாசிரியர் வெங்கடேசன் வரவேற்றார். இதில் சக்திவேல், பால்பாண்டியன் ரமேஷ், வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளிஆசிரியர்கள், மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பள்ளி மேலாண்மை குழுத்தலைவர் பரிதாபேகம் நன்றி கூறினார்.

## செல்வ விநாயகர் கோயில் மண்டல அபிஷேகம் நிறைவு விழா



**சங்கராபுரம், ஏப். 2:** சங்கராபுரம் அருகே உள்ள விரியூர் கிராமத்தில் ஒரே வளாகத்தில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர், ராதா ருக்மணி சமேத வேணுகோபால சுவாமி, மகா மாரியம்மன் கோயில் மற்றும் செல்லியம்மன், பாலமுருகன், ஏரிக்கரை பூரண புஷ்கலா சமேத அய்யனார் உள்பட 4 கோயில்கள் புனரமைக்கப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் மண்டலாபிஷேக விழா நேற்று நடைபெற்றது. கணபதி, லட்சுமி, நவகிரக ஹோமம், விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், அனுக்ஞை, யாகவேள்வி, மகா பூர்ணாஹூதி நடைபெற்றது. இதில் பல்வேறு ஊர்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

**ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்சன் பிரைவேட் லிட்.**
CIN : U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com
அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 93446 84194 / 98840 62068 / 99623 33307

[பிற்சேர்க்கை - IV-A]
[பார்க்க விதி - 8(6) & 9(1)]
**அசையாச் சொத்தின் மின் ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடமான வைக்கப்பட்டுள்ளதும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட். (OARPL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை மின் ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 30.03.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி எடெல்வீஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் SARFAESI சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது"** எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் நாள், சுவாதீன நாள், நிர்ணய விலை, ஏல உயர்வுத் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), ஆய்வு நாள் மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| **கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்:** | திரு. V. அய்யனார் மற்றும் திருமதி சுமதி |

**கடனீட்டுச் சொத்து விவரங்கள்: விழுப்புரம் II–ஆம் சார்பதிவு அலுவலகத்தைச் சேர்ந்த 23.09.2010 தேதியிட்ட ஆவண எண் 4695/2010–இன்படி திரு. V. அய்யனார், த/பெ. வடிவேல் கவுண்டர் அவர்களின் சொத்து.**
அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட நிலம் மற்றும் வீட்டுச் சொத்து. மனை எண் 6, விழுப்புரம், கண்டமானடி, ராஜா நகரில் அமைந்துள்ளது, செங்கல்பட்டு DTCP–ஆல் Ref எண் 435/89–இன்கீழ் ஒப்புதல்பெற்றது. அளவீடு: கிழக்கு மேற்காக 29 அடி, வடக்குத் தெற்காக 72 அடி, மொத்தப் பரப்பளவு 2088 சதுர அடி (193.98 சதுர மீட்டர்), ஆவணத்தின்படி சர்வே எண் 291/A1, பட்டாப்படி 291A/1B2, பட்டா எண் 979. அமைவிடம் கண்டமானடி வருவாய் கிராமம், கண்டமானடி ஊராட்சி, கோலியனூர் ஒன்றிய ஊராட்சி எல்லைகள். இது விழுப்புரம் IIஆம் இணை சார்பதிவு மாவட்டம் மற்றும் விழுப்புரம் பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள்: மனை எண் 27–க்கு வடக்கில், 23 அடிச் சாலைக்குத் தெற்கில், நிலத்தின் எஞ்சிய பாகத்துக்குக் கிழக்கில், மனை எண் 7–க்கு மேற்கில்.

| | | |
|---|---|---|
| **சொத்தின் உரிமையாளர்** | | **திரு. V. அய்யனார்** |
| **13(2) அறிவிப்பு தேதி** | **நேரடி சுவாதீன தேதி** | **31.03.2025 நாள்படி நிலுவைத்தொகை** |
| 14.10.2022 | 24.01.2025 | ரூ.51,33,363/– (ரூபாய் ஐம்பத்தொரு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று மட்டும்) |

| நிர்ணய விலை | முன்வைப்புத்தொகை (EMD) (நிர்ணய விலையில்10%) | ஏல உயர்வுத் தொகை | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| ரூ.23,40,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) | ரூ.2,34,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்) | ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று. |

| | |
|---|---|
| கணக்கு விவரங்கள் | **கணக்கு எண்** 344905001015, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட், **வங்கியின் பெயர்:** ICICI வங்கி, கிளை: BKC மும்பை, IFSC குறியீடு: ICIC0003449. |
| **மின் ஏல தேதி மற்றும் நேரம்:** | **07ஆம் தேதி மே 2025 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை** |
| ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிக் கடிதம் / வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணம் / முன்வைப்புத்தொகைச் (EMD) சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் | 05ஆம் தேதி மே 2025 அன்று மாலை 04:00 மணிக்குள். |

**ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த (OARPL) நிறுவனத்தின் i.e.http://omkaraarc.com/auction.php எனும் இணையத்தளத்தில் அல்லது சேவை வழங்குநரின் i.e.https://www.bankeauctions.com எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.**

**கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு**

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட தேதியிலும் நேரத்திலும் மின் ஏல முறையிலான ஏலம் / விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளை 01.04.2025 வரையான மேல்வட்டி மற்றும் அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை முடிவதற்கு முன் எந்த நேரத்திலும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் 30 (முப்பது) தேதிக்குக் குறையாத இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)–இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையின்படியும் விற்பனை செய்யப்படும்.

தேதி: 02.04.2025
இடம்: சென்னை

(V M திவாகரன்)
கைப்பேசி எண்: 99623 333307
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)